நேர்மை முதன்மைநிலை குழுப்பணி அர்ப்பணிப்பு சுற்றுப்புற சூழலை பேணிக்காத்தல்

正直 卓越 团队合作 承诺 可持续性 INTEGRITA DOKONALOST TÝMOVÁ PRÁCE ZÁVAZEK UDRŽITELNOST INTEGRITEIT UITMUNTENDHEID TEAMWERK INZET DUURZAAMHEID நேர்மை முதன்மைநிலை குழுப்பணி அர்ப்பணிப்பு சுற்றுப்புற சுழல் பேணிக்காத்தல் INTÉGRITÉ EXCELLENCE TRAVAIL D'ÉQUIPE ENGAGEMENT DURABILITÉ INTEGRITÄT EXZELLENZ TEAMARBEIT VERPFLICHTUNG NACHHALTIGKEIT ความซื่อสัตย์ ความเป็นเลิศ การทำงานเป็นทีม ความมุ่งมั่น ความยั่งยืน TISZTESSÉG KIVÁLÓSÁG CSAPATMUNKA ELKÖTELEZETTSÉG FENNTARTHATÓSÁG INTEGRITAS KEUNGGULAN KERJA TIM KOMITMEN KEBERLANJUTAN INTEGRITÀ ECCELLENZA LAVORO DI SQUADRA IMPEGNO SOSTENIBILITÀ 誠実さ 卓越性 チームワーク コミットメント サステイナビリティ RZETELNOŚĆ DOSKONAŁOŚĆ PRACA ZESPOŁOWA ZAANGAŻOWANIE ZRÓWNOWAŻONY ROZWÓJ INTEGRIDADE EXCELÊNCIA TRABALHO EM EQUIPE COMPROMETIMENTO SUSTENTABILIDADE ПОРЯДОЧНОСТЬ СОВЕРШЕНСТВО КОМАНДНАЯ РАБОТА ЗАИНТЕРЕСОВАННОСТЬ УСТОЙЧИВОЕ РАЗВИТИЕ INTEGRIDAD EXCELENCIA TRABAJO EN EQUIPO COMPROMISO SOSTENIBILIDAD INTEGRITET FÖRTRÄFFLIGHET LAGARBETE ÅTAGANDE HÅLLBARHET 신의성실 탁월성 팀워크 책임의식 지속 가능성

# எங்கள் மதிப்புகள் செயல்முறைகளில்

## கேட்டர்பில்லரின் நடத்தை விதிகள்

CATERPILLAR®

விதிகளுடன் வாழுதல் ........................................ 1
உரிமைகள் மற்றும் பொறுப்புகளை அறிவித்தல் ..... 2
பழிக்கு பழி இல்லா கொள்கை ............................ 2

நேர்மை ........................................................ 5
நேர்மை ........................................................ 6
விருப்பங்களில் கருத்து வேறுபாடு ........................ 6
போட்டியாளர் நடத்தை ....................................... 7
இலவச வர்த்தகம் ................................................ 7
நிதி அறிக்கைகள் மற்றும் கணக்கிடுதல் ................ 8
பண்பான பரிமாற்றம் .......................................... 8
உளதகவல்கள் .................................................... 9
முறையற்ற செலுத்தினங்கள் ................................ 9

முதன்மைநிலை ............................................... 11
பொருட்கள் மற்றும் சேவை தரம் ........................ 12
வாடிக்கையாளருக்கு மதிப்பளித்தல் .................... 12
பணி சூழல் ........................................................ 13
ஊழியர் செயல்திறன் ......................................... 13
ஊழியர் முன்னேற்றம் ........................................ 14
இடர்பாடு மேலாண்மை ...................................... 14
நிறுவன கண்ணோட்டப் பார்வை ....................... 15

குழுப்பணி ....................................................... 17
மரியாதை மற்றும் தொல்லை இல்லாமை ........... 18
நியாயமும் பாரபட்சம் இன்மையும் ...................... 18
சேர்ந்து செயல் படும் சூழல் ................................ 19
உலகளாவிய வரையறைகள் ............................. 19
வெளி நிறுவனங்கள் .......................................... 20
வியாபாரிகளும் விநியோகஸ்தர்களும் ................ 20
சப்ளையர்கள் ..................................................... 21

அர்ப்பணிப்பு .................................................. 23

தனிப்பட்ட பொறுப்பு ........................................ 24

உடைமைகள் பாதுகாப்பு .................................. 24

இரகசிய தகவல்கள் ........................................... 25

மின்னணு பரிமாற்றங்கள் ................................. 25

தனிநபர் தனியுரிமை ........................................ 26

பொது விஷயங்கள் ........................................... 26

அரசு ஒப்பந்தங்கள் ........................................... 27

சுற்றுப்புற சூழலை பேணிக்காத்தல் .................... 29

சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ............................ 30

கண்டுபிடிப்பு ..................................................... 30

சுற்றுச்சூழல் பொறுப்பு ...................................... 31

கட்டமைப்பு மற்றும் சக்தி ................................. 31

சமூகங்கள் ......................................................... 32

சிறந்த குழு ........................................................ 32

நிறுவன கொள்கைகள் ...................................... 33

விட்டுக்கொடுப்பது .......................................... 33



# விதிகளின் படி நடப்பது

### நேர்மை. முதன்மைநிலை. குழுப்பணி. அர்ப்பணிப்பு. சுற்றுப்புற சூழலை பேணிக்காத்தல்.

இந்த நடத்தை விதிகளில் உள்ள சொற்கள் எங்களை விவரிக்கும். எங்களுள் இடம், கலாச்சாரம், மொழி மற்றும் வணிகம் போன்றவற்றில் வேறுபாடுகள் இருந்தபோதிலும் - இந்த பொதுவான கொள்கைகளுடன் கூடிய உயரிய நடத்தை நியமனங்களுக்கு பகிர்ந்த உறுதியளிப்பால் ஒரே நிறுவனமாக நாங்கள் கேட்டர்பில்லரின் கீழ் ஒன்றாக இணைந்துள்ளோம்.

பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் விதிகள் வரம்புக்குள் நாங்கள் எங்கள் வணிகத்தை நடத்தி வந்தாலும், எங்களுக்கு, சட்ட இணக்கம் மட்டும் போதாது. அதையும் தாண்டி நாங்கள் முயற்சிப்போம். எங்களின் நடத்தை விதிகள் மூலமாக, நாங்கள் அனைவரும் பெருமைகொள்ளும் பணி சூழலை உருவாக்க முனைவதுடன், மற்றவர்கள் மதிக்கக்கூடிய பாராட்டக்கூடிய ஒரு நிறுவனமாகவும், எங்களின் செயல்கள் மூலமாக உலகை சிறந்ததாகவும் ஆக்கச்செய்வோம். நாம் ஒன்றிணைந்து, நம்மை மேலும் உயர்ந்த அளவு வெற்றிகளின் முன்னோக்கி எடுத்துச் செல்லும் மதிப்பு அடிப்படையிலான பண்பாட்டிற்கான அடித்தளத்தை அமைத்துக்கொண்டிருக்கின்றோம். நாம் அனைவரும் ஒன்றிணைந்து, உலகின் மிகச்சிறந்த நிறுவனங்களில் ஒன்றான நிறுவனத்தின் நற்பெயரை நிலைநிறுத்தி - எதிர்காலத்திற்காக அதனை வலுவாக்குகின்றோம்.

இந்த நடத்தை விதிகள், கேட்டர்பில்லர் நிறுவனத்தின் ஊழியர்கள், அதன் உலகளாவிய இணை மற்றும் துணை நிறுவனங்கள், இயக்குனர்கள் குழு உறுப்பினர்களின் தினசரி நடவடிக்கைகளுக்கு பொருந்தும். நம் ஒவ்வொருவருக்கும், இந்த நடத்தை விதிகளைப் படித்து, இதன் பொருள் என்னவென்று புரிந்துகொண்டு, தொடர்ந்து அதனை செயல்படுத்தும் தனிப்பட்ட பொறுப்பு உள்ளது. நமது நிறுவனத்தில், மற்றவர்களை வழிநடத்துபவர்கள் "விதிகளின்படி வாழுதல்" என்பதின் அர்த்தத்திற்கு எடுத்தக்காட்டாக இருக்க வேண்டிய ஒரு சிறப்பான பொறுப்பை வகிக்கிறார்கள்.

# ரிப்போர்ட்டிங் உரிமைகள் மற்றும் பொறுப்புகளை அறிவித்தல்

உங்களுக்கு நடத்தை விதி, நிறுவன கொள்கை அல்லது பொருந்தகூடிய சட்டத்தை மீறும் அல்லது மீறுவது போல் தோன்றும் சூழல் அல்லது செயலைப்பற்றி தெரியவந்தால் நீங்கள், உடனடியாக உங்கள் கண்காணிப்பாளர் அல்லது உள்ளூர் மேலாண்மையிடம் தெரிவிக்க வேண்டும். மேலும், நடத்தை விதி, நிறுவன கொள்கை அல்லது பொருந்தகூடிய சட்டத்தை மீறும் சூழல் அல்லது செயல் அல்லது மீறுவது போன்று இருப்பதை தெரிவிக்க தனிப்பட்ட உரிமையும் பொறுப்பும் உங்களுக்கு உள்ளது. நீங்கள் இந்த தெரிவிக்கும் உரிமையை பொறுப்புடன் பயன்படுத்தி, மீறல் உள்ளது என்று நீங்கள் நம்பினால் மட்டுமே பிரச்சனைகளை தெரிவிக்க வேண்டும். இந்த முறையீடானது, தொந்தரவு செய்யக்கூடியதற்காகவும், தனிப்பட்ட கருத்து மட்டும்அல்லது வேறு சாதாரண விஷயங்களின் அடிப்படையாகவும் இருக்கக்கூடாது. நீங்கள் உங்கள் கேள்விகள் அல்லது பிரச்சனையை அல்லது இத்தகைய முறைகேடை உங்கள் கண்காணிப்பாளர், உள்ளூர் மேலாண்மை அல்லது நிறுவன மனிதவள குழுக்கள் அல்லது சட்டரீதியான சேவைகளிடம் தெரிவிக்கலாம். பின்வரும் தொடர்பு விவரங்களை உபயோகித்து, வணிக செயல்பாடுகள் அலுவகத்தை தொடர்பு கொள்ளும் வாய்ப்பு உங்களுக்கு எப்பொழுதுமே உண்டு.

**நேரடி தொலைபேசி எண்:** +1-309-675-8662 (ஆங்கிலம் மட்டுமே)

**இலவச உதவி எண்:** கேட்டர்பில்லர் இலவச உதவி எண்களை பல்வேறு நாடுகளில் செயல்படுத்தி வருகின்றது. கனடா, அமெரிக்கா மற்றும் அமெரிக்கா விர்ஜின் தீவுகளின் எண் 1-800-300-7898. இதர நாடுகளிலும் தற்போது இலவச அழைப்பு எண்கள் வந்துவிட்டது. இவை அனைத்தும் https://codeofconduct.cat.com மில் போஸ்ட் செய்யப்பட்டுள்ளது. இந்த எண்களில் மொழிப்பெயர்ப்புகளும் உள்ளது. பெயர்வெளியிடாத முறைகேடு தெரிவிப்பு அனுமதிக்கப்பட்டுள்ள நாடுகளில் இருந்து நீங்கள் அழைத்தால் நீங்கள் பெயர் வெளியிடாதவாறு இருக்கலாம்.

**கட்டண அழைப்பு உதவி எண்:** +770-582-5275 (மொழிபெயர்ப்பு உள்ளது)

**உள்ளூர் தொடர்புகள்:** https://codeofconduct.cat.com யில் உள்ளது

**ஈமெயில்:** BusinessPractices@cat.com

**தபால் முகவரி:** 100 NE ஆதம்ஸ், பியோரியா, IL 61629, USA

கேட்டர்பில்லர் கொள்கைகள், செயல்முறைகள் அல்லது இந்த நடத்தை விதிகளை மீறுதல், உடனடியாக திறம்பட ஆராயப்படும். நிறுவனத்தின் மனிதவள வழிக்காட்டல் மற்றும் உள்ளூர் சட்டங்கள் உடன் சேர்ந்து, மீறல்களுக்கு பணியிழப்பு உள்ளிட்ட ஒழுங்குமுறை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் விளைவை ஏற்படுத்தலாம்.

நீங்கள் மேலே பட்டியலிடப்பட்டுள்ள முறைகள் ஏதேனும் ஒன்றை பயன்படுத்தி ஆபிஸ் ஆப் பிசினஸ் நடைமுறைகளின் தகவல் தனியுரிமை அறிக்கையின் நகலுக்கு விண்ணப்பிக்கலாம்.

# பழிவாங்குதல் இல்லாக் கொள்கை

கேட்டர்பில்லர், நல்லெண்ணத்தின் அடிப்படையில் நெறிமுறை பிரச்சனையை எழுப்புவதற்காக உங்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையையும் எடுக்காது. மேலும், கேட்டர்பில்லர் நல்லெண்ணத்தை கொண்டு, பிரச்சனையை எழுப்பும் அல்லது முறைகேடு தெரிவிக்கும் ஊழியருக்கு எதிராக, தனிநபர் எழுப்பும் எந்த பதிலடியையும் பொறுத்துக்கொள்ளாது.

# எங்கள் மதிப்புகள் செயல்முறைகளில்

கேட்டர்பில்லரின் நடத்தை விதிகள்

## நேர்மை

நேர்மையின் சக்தி

## முதன்மைநிலை

தரத்தின் சக்தி

## குழுப்பணி

ஒன்றாக பணிபுரிதலின் சக்தி

## அர்ப்பணிப்பு

பொறுப்பின் சக்தி

## சுற்றுப்புற சூழலை பேணிக்காத்தல்

நீடித்திருக்கும் திறன்

# நேர்மை

## நேர்மையின் சக்தி

நாம் செய்யும் அனைத்திற்கும் நேர்மையே அடித்தளமாகும். அது நிலையானது. நம்முடன் பணிபுரியும், வாழும் மற்றும் சேவை புரியும் நபர்கள் நம்மை நம்பியுள்ளனர். நாங்கள் எங்கள் செயல்களை எங்களின் வார்த்தைகளின்படி ஒருங்கிணைத்து என்ன உறுதியளிக்கிறோமோ அதையே செயல் படுத்துகிறோம். நாங்கள் எங்கள் நற்பெயரை நம்பிக்கை மூலமாக வலுப்படுத்தி வடிவமைப்போம். நாங்கள் தவறான முறையில் மற்றவர்களை பாதிக்கமாட்டோம் அல்லது அவர்கள் எங்களை தவறாக பாதிக்கச்செய்யவும் விடமாட்டோம். நாங்கள் மரியாதையுடனும், வெளிப்படையான நேர்மையான முறையிலும் நடந்துகொள்வோம். சுருக்கமாக, நிறுவனத்தின் நற்பெயர் இங்கு பணிபுரியும் நபர்களின் நெறிமுறை செயல்திறனை பிரதிபலிக்கின்றது.

**யின்போது நாங்கள் நேர்மையை செயலில் ஈடுபடுத்துவோம்...**

# நாங்கள் நேர்மையுடன் செயல்படுபவர்கள்

நாங்கள் நேர்மை மற்றும் நன்னெறி நடத்தையின் மிக உயரிய தரத்தைப் பெற்றுள்ளோம். நாங்கள் உண்மையை கூறுபவர்கள். நாங்கள் நியாயமாக எதை வழங்க இயலும் என்று நிர்ணயித்து, நியாமாக எதிர் பார்க்கப்படுவதை மட்டுமே உறுதி அளிப்போம். நாங்கள் எங்கள் கடமைகளை செயல்படுத்த பாடுபடுகின்றோம். எங்கள் நிறுவனத்தின் பங்குதாரர்கள், வாடிக்கையாளர்கள், விநியோகஸ்தர்கள், டீலர்கள், சப்ளையர்கள் மற்றும் எங்களுடன் வணிகம் புரியும் நபர்கள் மற்றும் எங்களின் சக ஊழியர்கள் நாங்கள் கூறுவதை நம்பி, நாங்கள் எங்கள் வாக்கை எப்பொழுதுமே காப்போம் என்றும் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

# நாங்கள் பிரச்சனைகளை மற்றும் சாத்தியமான விருப்ப முரண்பாடுகளை தவிர்த்து மற்றும் அது ஏற்பட்டால் அதனை சமாளிப்போம்

நமது தனிப்பட்ட விருப்பங்கள் மற்றும் நிறுவனத்தின் விருப்பத்திற்கிடையே பிரச்சனையை உருவாக்கும் அல்லது உருவாகும் நிலை தெரிந்தாலும் அத்தகைய செயல்களில் நாம் ஈடுபடக்கூடாது. நிறுவனத்தை முழுமையாகவும் நல்லெண்ணத்துடனும் பிரதிபலிப்பதை ஒரு நபருக்கு அவரின் தனிப்பட்ட விருப்பம் அல்லது குடும்பம் அல்லது இதர உறவுகள் கடினமாக்கும்போது இந்த சந்தர்ப்பங்கள் ஏற்படும். விருப்ப முரண்பாடுகள் கேட்டர்பில்லரின் செயல்பாடுகளில் எந்தப் பகுதியிலிருந்தும் எழலாம். மிக கடுமையான விருப்ப முரண்பாடுகள், பொதுவாக ஒரு ஊழியர் அல்லது முன்னாள் ஊழியர் நிறுவனத்தின் பணத்தை செலவு செய்ய அதிகாரத்தை பெறும்போதும், தேர்ந்தெடுக்கும் அதிகாரத்தை பெறும்போதும், நிறுவனத்தின் வெளியில் உள்ள நபரிடம் ஈடுபடும்போதும், நிறுவனத்தின் வெளியில் உள்ள நபருக்கு மதிக்கத்தக்க தகவலை பெற்றிருக்கும்போதும் எழுகின்றது. விருப்ப முரண்பாடுகள் அல்லது விருப்ப முரண்பாடு ஏற்படுவது போன்ற நிலைபெரும்பாலும் ஒரு ஊழியருக்கு பரிசு, உதவி அல்லது கேளிக்கை போன்றவற்றை வழங்கும்போது உருவாகின்றது. இந்த செயல்முறைகளில் சில சாதாரண வணிக உறவின் ஒரு பகுதியாக இருந்தாலும், நாங்கள் பரிசுகள், உதவிகள் அல்லது கேளிக்கைகள் போன்றவை, பதிலுக்கு நாம் நியாயமாக செய்ய முடிவதைவிடஅதிக மதிப்புடையதாக இருந்தாலோ அல்லது நாம் சட்டம், கேட்டர்பில்லர் வணிக விருப்பங்கள் அல்லது கேட்டபில்லரின் நெறிமுறை வணிக செயல்பாடுகளுக்கு எதிராக எந்த வகையிலும் செயல்படுதல் அல்லது செயல்படுவது போன்று தெரிந்தாலோ அவை எதையும் நாங்கள் ஒப்புக்கொள்ளமாட்டோம்.

# நாங்கள் நல்லெண்ணத்துடன் போட்டியிடுவோம்

நியாயமான போட்டி சுதந்திரமான நிறுவனத்தின் அடிப்படையாகும் என்பதை கேட்டர்பில்லர் நம்புகின்றது. நாங்கள் வணிகம் புரியும் இடத்தில் நம்பிக்கை எதிர்ப்பு மற்றும் போட்டி சட்டங்களை பின்பற்றுவோம். நாங்கள் போட்டியாளர்கள், டீலர்கள், விநியோகஸ்தர்கள், சப்ளையர்கள் மற்றும் வாடிக்கையாளர்களுடனான உறவில், பிறருடன் போட்டியிடும் எங்கள் திறனை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை தவிர்ப்போம். விலைகள், விற்கப்பட்ட பொருட்கள் மீதான நிபந்தனைகள் அல்லது உற்பத்தி செய்யப்பட்ட அல்லது விற்கப்பட்ட பொருட்களின் வகை அல்லது எண்ணிக்கையை பாதிக்கும் எந்தவித ஏற்பாடுகள், புரிதல்கள் அல்லது ஒப்பநதஙகளில் போட்டியாளர்களுடன் நாங்கள் ஈடுபடுவதில்லை.

# நாங்கள் சுதந்திர வணிகத்தை ஆதரித்து சர்வதேச வணிக சட்டனகளை பின்பற்றுகின்றோம்

கேட்டர்பில்லர் சுதந்திர வணிக சூழலில் சிறந்த முறையில் போட்டியிடுகின்றது. சுதந்திரவணிகமானது, நமது உலகளாவிய போட்டிதன்மை யை தொடர்ந்து மேம்படுத்தும் தேவையை நம்மிடையே உருவாக்கி, நமது வாடிக்கையாளர்களின் தேவைகளை சிறப்பாக கவனிக்க அனுமதிக்கும் ஒரு சூழலை உருவாக்குகிறது. நாங்கள் உலகச்சந்தையில் போட்டியை அதிகரிக்கும் கொள்கைகளை ஊக்குவிக்கின்றோம் மற்றும் வணிக மற்றும் முதலீடு தடைகளை குறைக்கவும் - இன்னும் சிறப்பாக சொன்னால் - அகற்றவும் முயற்சிக்கின்றோம். சுதந்திர வர்த்தகமானது வாழ்வின் தரத்தை உயர்த்துவதுடன் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் பொருளாதார லாபங்களை வளைவிக்கும் என்று நாங்கள் நம்புகின்றோம். நாங்கள் ஏற்றுமதி இறக்குமதி கட்டுபபாட்டு ஒழுங்குமுறைகள் உள்ளிட்ட பொருந்தக்கூடிய சர்வதேச சட்டங்களை பின்பற்றுவதுடன் அனுமதி மற்றும் புறக்கணிப்பு எதிர்ப்பு சட்டங்களுக்கு இணங்கியும் நடந்து வருகின்றோம். நாம் எந்த நாட்டில் வணிகம் புரிகின்றோமோ அந்த நாட்டின் வணிக சட்டங்கள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு இணங்குவதை உறுதி செய்வதில் நம் ஒவ்வொருவருக்கும் பொறுப்பு உள்ளது.

# நாங்கள் எங்கள் நிதி அறிக்கைகள் மற்றும் கணக்குப்பதிவுகள் துல்லியமாகவும் முழுமையாகவும் இருப்பதை உறுதி செய்கின்றோம்

முதலீட்டாரர்கள், கடன் கொடுப்பவர்கள், கட்டுப்பாட்டு அதிகாரிகள் மற்றும் பலருக்கு நமது நிறுவனத்தின் நிதி மற்றும் கணக்கீடு தகவல்கள் மீது சட்டரீதியான முறையான விருப்பம் உள்ளது. கேட்டர்பில்லரின் நிதி அறிக்கைகள் மற்றும் கணக்கீடு பதிவுக கள் நேர்மையானது மற்றும் நிறுவனத்தின் கணக்கு புத்தகத்தின் அடிப்படை தகவல் உட்செலுத்தல்களின் முறையான முடிவுகள், துல்லியம், முழுமை, நேரம் தவறாமை மற்றும் புரிந்துகொள்ளலின் அடிப்படையிலானது. நாங்கள் ஒவ்வொரு கணக்கீடு அல்லது நிதி உட்செலுத்தலானது அதற்குரிய தகவலில் விவரிக்கப்பட்டுள்ளதை துல்லியமாக பிரதிபலிக்கிறது என்பதை உறுதி செய்கின்றோம். கேட்டர்ப்பில்லரில் உள்ள ஒவ்வொருவரும் - நிதி மற்றும் கணக்கீடு துறையில் இருப்பவர்கள் மட்டுமல்லாது- நமது நிதி பதிவுகள் முழுமையாகவும் துலலயமாக இருப்பதையும், உள்புற கட்டுபாடுகள் கடைபிடிப்பதையும் உறுதி செய்வதில் அனைவருக்கும் பங்கு உள்ளது. வெளிப்புற நிதி அறிக்கைகளுக்கு பொருந்தக்கூடிய அதே நேர்மை நியமனங்கள், உள்புற மேலாண்மை கருவிகளாக பயன்படுத்தப்படும் நிதி அறிக்கைகளுக்கும் பொருந்தும்.

# நாங்கள் எங்கள் தொடர்புகளல் சிறப்பாகவும், நேர்மையாகவும் வெளிப்படையாகவும் உள்ளோம்

ஊழியர்களாகிய நாங்கள், ஒருவருக்கொருவர் மரியாதையுடனும், சிறப்பாகவும், நேர்மையாகவும், வெளிப்படையான முறையிலும் தொடர்பு கொள்ளுவோம். ஒரு பொதுவான நிறுவனம் என்ற வகையில், எங்கள் வணிகம் பற்றிய விவரங்களை எங்கள் பங்குதாரர்களுக்கு தெளிவாகவும், துல்லியமாகவும் நேர்மையாகவும் தெரிவிக்கும் பொறுப்பு எங்களுக்கு உண்டு. அமெரிக்க பாதுகாப்பு மற்றும் பரிமாற்ற ஆணையம் மற்றும் இதர அரசு மற்றும் ஒழுங்குமுறை முகவர்களுக்கு சமர்ப்பிக்கப்படும் எங்கள் அறிக்கைகள் மற்றும் மனுக்களின் வெளிப்பாடுகள் முழுமையாகவும், சிறப்பாகவும், துல்லியமாகவும், நேரம் தவறாமலும் புரியும்படியாகவும் இருக்க வேண்டும். நாங்கள் பொதுப்படையாக தொடர்புகொள்ளும்போது, எங்கள் செய்திகளில் நாங்கள் நிலையாக இருக்கின்றோம். நியமிக்கப்பட்ட முதன்மை நபர்கள் மட்டுமே பத்திரிகை, அரசு, ஆராய்வாளர்கள் மற்றும் பங்குதாரர்களடம் இருந்து வரும் தகவல்களுக்கான கேள்விகளுக்கு பதிலளிக்கவோ அல்லது கேட்டர்பில்லர் சார்பாக தொடர்பு கொள்ளுவார்கள். நாங்கள் பொதுமக்களுக்கு கேட்டர்பில்லர் பற்றிய தகவல்களை தெரிவிக்கும்போது, அதனை நியாயமானதாகவும், எந்த தனிநபர் அல்லது குழுவிற்கு சாதகமாக இல்லாமல் ஒருபக்கசார்பின்றி இருப்பதாகவும் செய்வோம்.

## நாங்கள் உள்புற தகவல்களை சரியாகவும் சட்டரீதியாகவும் கையாளுவோம்

உள்புற தகவல்கள் என்பது பொதுமக்களுக்கு தெரியாத நிறுவனம் பற்றிய தகவல்களாகும். இத்தகைய தகவல்கள் - உதாரணமாக குறிப்பிட்ட நிதி விவரங்கள், தொழில்நுட்ப பொருட்கள் மற்றும் எதிர்கால திட்டங்கள் போன்றவை. - மற்றவர்களுக்கு குறிப்பிட்ட மதிப்பை அளிக்ககூடியவைகள் அதனால், இவை கட்டாயமாக இரகசியத்தன்மையுடன் பாதுகாக்கப்படவேண்டும். உள்புற தகவல் மதிப்புள்ள "பொருளாக" இருக்கலாம். இதனை முதலீட்டாளர் அவரின் முதலீட்டு தீர்மானத்திற்கு முக்கியமானதாக கருதலாம். கேட்டர்பில்லர் பற்றிய உள்புற தகவல் "பொருள்" பெற்றுள்ள எந்த நபரும் அதனை தனது தனிப்பட்ட லாபம் கருதி பயன்படுத்தவோ, மற்றவர்களுக்கு வழங்கவோ அல்லது கேட்டர்பில்லர் பங்குப்பத்திரங்களில் வணிகம் செய்யவோ கூடாது. எந்த கேட்டர்பில்லர் ஊழியரும் அவரின் பணியின் விளைவாக, மூன்றாம் தரப்பினர் (டீலர்கள், சப்ளையர்ஸ், வாடிக்கையாளர் மற்றும் போட்டியாளர்கள் அடங்குவார்கள்) பற்றி அவர்கள் பெறும் உள்புற தகவல் விவரங்களை அந்த நிறுவனத்தின் பங்குப்பத்திரங்களில் வர்த்தம் செய்யக்கூடாது மறறும் மற்றவர்களை செய்யச்சொல்லி அறிவுறுத்தவும் கூடாது. நாங்கள் அனைத்து ஊழியர்கள், அவர்களின் குடும்பத்தினர் மற்றும் கேட்டர்பில்லர்-உடனான தொடர்புகள் யாருக்கெல்லாம் உள்புற விவரங்களை தெரிந்துகொள்ள வாய்ப்பளிக்கிறதோ அந்த நபர்கள் அனைவரும் இந்தக் கொள்கைகள் மற்றும் உள்புற வர்த்தகம் தொடர்பான கேட்டர்ப்பில்லரின் கொள்கைகள் உடன் இணக்கத்துடன் நடக்க வேண்டும் என்று எதிர்ப்பார்க்கின்றோம்.

## முறையற்ற செலுத்தினங்களை வழங்க நாங்கள் மறுப்பு தெரிவிப்போம்

பொதுநல அதிகாரிகள், இதர நிறுவனங்கள் மற்றும் தனியார் நபர்களுடன் தொடர்புகொள்ளும்போது, நாங்கள் நெறிமுறை வணிக நடைமுறைகளை கட்டாயம் பின்பற்றுவோம். நாங்கள் மற்றவர்கள் மேல் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, லஞ்சம் அல்லது நெறிமுறையற்ற வேறு எந்த வகையிலும் அல்லது நேர்மை மற்றும் நாணயத்திற்கான நமது நற்பெயரை கெடுக்கும் வகையில் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்த முயல மாட்டோம். இது போன்ற நடவடிக்கைகள் தென்பட்டாலும் அதனை தவிர்க்கவேண்டும்.

# முதன்மைநிலை

தரத்தின் சக்தி

**நாங்கள் லட்சிய இலக்குகளை நிர்ணயித்து அதனை அடைவோம்.**
எங்கள் தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் தரம் கேட்டர்பில்லரின் வலிமை மற்றும் பாரம்பரியத்தை பிரதிபலிக்கிறது நாங்கள் எதை செய்கின்றோமோ அதை எடுத்துச்செய்து அதனை சாத்தியமாக்குவதில் பெருமை கொள்கின்றோம். நாங்கள் மக்கள், செயல்முறை, தயாரிப்பு மற்றும் சேவை முதன்மைநிலை பற்றி விருப்பம் கொண்டுள்ளோம். நாங்கள் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு புதிய கண்டுபிடிப்புகள், தொடர் முன்னேற்றம், வாடிக்கையாளர் தேவையில் அதிக கவனம் மற்றும் அந்த தேவைகளை அவசர நிலை கொண்டு பூர்த்தி செய்வதில் அர்ப்பணிப்புடன் செயல் பட்டு சேவையை வழங்க தீர்மானத்துடன் இருக்கின்றோம். எங்களுக்கு, முதனமை நிலை என்பது ஒரு மதிப்பு மட்டும்கிடையாது; அது ஒரு ஒழுக்கம் மற்றும் உலகை சிறந்த இடமாக மாற்றுவதற்கான ஒரு வழியும் ஆகும்.

**நாங்கள் முதன்மைநிலையை செயலில் ஈடுபடுத்துவோம்...**

## நாங்கள் எங்கள் தயாரிப்புகள் மற்றும் சேவைகளில் சிறந்த தரத்தை தவிர வேறு ஒன்றையும் ஏற்றுக்கொள்வதில்லை

நாங்கள் தரத்திற்காக அர்ப்பணித்துக் கொள்வதுடன் நாங்கள் வழங்கும் அனைத்து தயாரிப்புகள் மற்றும் சேவைகளில் தனிப்பட்ட பெருமையையும் எடுத்துக்கொள்கின்றோம். வாடிக்கையாளர் தேவைகள் மீதான எங்களின் ஆழ்ந்த கடுமையான கவனம் தான் தொடர்ந்து எங்களை மேம்படுத்த வழிவகுக்கின்றது. எங்களின் தொடர் வெற்றியானது, எங்களின் வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகளுக்கு அதிகமாக செயல்படுவது மற்றும் நாங்கள் செய்யும் எல்லாவற்றையும் உறுதியுடன் செய்வது ஆகும்.

## நாங்கள் எங்கள் வாடிக்கையளர்களுக்கு, எப்பொழுதுமே விரைவான உணர்வுடன் அதிக மதிப்பை அளிப்பதில் கவனம் கொள்கின்றோம்

நாங்கள் எங்கள் வாடிக்கையாளரின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காகவே பாடுபடுகின்றோம். நாங்கள் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு செவிமடுத்து, அவர்களின் தேவைகள் மற்றும் சவால்களை புரிந்துகொண்டு, அவர்கள் வெற்றி பெறுவதற்கு உதவு கிற தயாரிப்புகள், சேவைகள் மற்றும் தீர்வுகளை வழங்கி முதன்மை நிலைக்கான நற்பெயரை ஈன்றுள்ளோம். எங்கள் வாடிக்கையாளர்கள் கேட்டர்பில்லரிடம் இருந்து மிகச்சிறந்தவற்றை எதிர்ப்பார்க்கின்றார்கள். நாம் ஒவ்வொருவரும் நமது தனிப்பட்ட தீர்மானங்கள் மற்றும் செயல்கள் நிறுவனத்திற்கு நேர்மையான கருத்தை வழங்குவதிலும், நமது வாடிக்கையாளர்களின் மனநிறைவை மேம்படுத்தும் வகையிலும் அவர்களின் நம்பிக்கையை ஊக்கப்படுத்தும் வகையிலும் இருப்பதை உறுதி செய்யவேண்டும். இவ்வாறு செய்வதற்கு, நாங்கள் வழங்கும் உற்பத்திகளிலும் சேவைகளிலும் விரைவான உணர்திறனுடன் இயன்ற அதிகபட்ச மதிப்பை வழங்க செயல்படுகின்றோம். தரம் மீதான எங்களின் அர்பணிப்பு, கேட்டர்பில்லர் உற்பத்தி அமைப்பின் வழிகாட்டல் கோட்பாடுகள் மற்றும் தொடர் முன்னேற்றம் அதனை சாத்தியமாக்குகிறது.

# நாங்கள் முதன்மைநிலையை ஆதரிக்கும் பணி சூழலை நிறுவுகின்றோம்

கேட்டர்பில்லர் ஊழியர்கள் தங்கள் பணி சூழலானது தனிநபர் சாதனை, தொடர் கற்றல் மற்றும் சுய மதிப்பு உணர்வை அதிகரிக்கும் என்று எதிர்ப்பார்க்கின்றனர். நாங்கள் முதன்மை நிலையை அடைய பல்வேறு கோணங்களை முனைப்புடன் தேடிப் பகிர்ந்து தீவிரமாக முயற்சிக்கின்றோம். ஊழியர்களுக்கு தங்களின் சொந்த செயல்திறன் மற்றும் நிறுவனத்தின் செயல்திறனை எவ்வாறு மேம்படுத்துவது என்பது குறித்து விருப்பங்களை நம்பிக்கையுடன் வெளிப்படுத்தும் உரிமை உள்ளது. நாங்கள் குழுப்பணிகளுக்கு செவிம டு த்து, பதிலளித்து, ஆதரவு அளித்து, உண்மைகள் மற்றும் தரவுகளின் அடிப்படையில் தீர்மானங்களை எடுக்கின்றோம்.

# நாங்கள் தொழிலாளர்களை அவர்களின் கல்வித்தகுதி மற்றும் செயல்திறன் அடிப்படையில் தேர்வு செய்து, பணியில் அமர்த்தி மதிப்பீடு செய்வோம்

கேட்டர்பில்லர் தொழிலாளர்களை அவர்களின் தனிப்பட்ட கல்வித்தகுதி, பணிக்கு தேவையான திறன்கள், செயல்முறைகளில் வெளிப்படும் செயல்திறன் மற்றும் கேட்டர்பில்லர்-க்கு அவர்களின் பங்களிப்புகள்ஆகியவற்றின்அடிப்படையில் தேர்வு செய்து, பணி அமர்த்தி, மதிப்பீடு செய்து சலுகைகளையும் அளிக்கும்.

# வளர்ச்சிக்கான வாய்ப்புகளை நாங்கள் ஊழியர்களுக்கு அளிக்கின்றோம்

நாங்கள் ஊழியர்களிடம் அவர்களின் சிறந்த முயற்சிகளை அளிக்கவும், அவர்களின் வெற்றிகள் மற்றும் தோல்விகளில் இருந்து கற்றலை பெறவும், அவர்கள் தானாகவே அவர்களின் செயல்திறனை மேம்படுத்தும் வாய்ப்புகளை பெறவும், தலைவர்களால் பரிந்துரைக்கப்பட்ட நிறுவனம் வழங்கும் தொடர் கற்றல் திட்டங்களில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். நாங்கள் சுய வளர்ச்சிக்கு ஆதரவு அளித்து, ஊழியர்களை அவர்களின் தற்போதைய பணியில் திறம்பட பணிபுரியவும் அவர்களின் பணி திறன்களை மேம்படுத்தவும் உதவி புரிவோம். எங்களின் அனைத்து ஊழியர்களும் அவர்களின் திறன்களை வளர்த்துக்கொள்ளவும் கேட்டர்ப்பில்லரின் வெற்றிக்கு அர்ப்பணிப்பு செய்வதற்குமான வாய்ப்புகளை உறுதி செய்வதில் உறுதி கொண்டுள்ளோம்.

# நாங்கள் இடர்பாடுகளை சமாளிக்கக்கூடியதாகவும் அதை சாத்தியமான வாய்ப்பாகவும் பார்க்கின்றோம்

ஏனெனில், வணிகமும் இடர்பாடுகளும் பிரிக்கமுடியாதவைகள் என்பதை உணர்ந்து, நாங்கள் எங்கள் வணிகத்திற்கு பெரும் அளவிலான சாத்தியமான தாக்கத்தை ஏற்படுத்தும் இடர்பாடுகளை முன்கூட்டியே கண்டறிந்து, அணுகி அதனை நிர்வகிப்போம். எங்களுக்கு, இடர்பாடுகளை நிர்வகிப்பது என்பது போட்டியில் சாதகநிலை சாத்தியத்துக்கான வாய்ப்புகளை தேடிப் பெறுவதும் ஆகும்.

# நாங்கள் நிறுவனத்தின் கண்ணோட்டத்தில் பார்க்கின்றோம்

நிறுவன கண்ணோட்டம் பார்த்தல் என்பது ஒட்டுமொத்தமாக எங்கள் நிறுவனத்தின் சிறந்த நன்மைகளுக்காக செயல்படுதல் என்பதாகும். உள்ளூர் தீர்மானங்கள் எங்கள் நிறுவனத்தை போட்டியாளரிடையே அனுகூலமற்றதாக இருக்கச் செய்யாது என்பதை உறுதி செய்ய பாடுபடுவோம். நாம் தீர்மானங்கள் எடுக்கும்போது எப்பொழுதுமே நிறுவனத்தை கருத்தில் கொள்ள வேண்டும். எங்களின் வெற்றிக்கு எங்களின் தனிப்பட்ட வணிக நிலையங்களில் நாங்கள் தொடர்ந்து நிறுவன சிந்தனை புகுத்தல் தேவைப்படுகின்றது.மேலும், நமது அனைத்து தயாரிப்புகள் மற்றும் சேவைகளை சிறப்பாக மாற்ற நாம் நிறுவனத்தில் என்ன கற்றோமோ அதை செயல்படுத்தவும் வேண்டும்.

# குழுப்பணி

ஒன்றாக பணிபுரிதலின் சக்தி

**நாங்கள் ஒவ்வொருவரும் மற்றவரின் வெற்றிக்கு உதவுவோம்.**

நாங்கள் ஒரு குழுவாக, எங்களின் தனித்துவ திறன்களை எங்களுடன் பணிபுரிபவர்கள், வாழுபவர்கள் மற்றும் சேவைபுரிவர்களுக்கு உதவுவதற்கு பகிர்ந்துகொள்கின்றோம். எங்கள் மக்களின் பல்வேறு எண்ணங்கள் மற்றும் தீர்மான முடிவுகள் எங்கள் குழுவை வலுப்படுத்தும் நாங்கள் வெவ்வேறு கருத்துகள், அனுபவங்கள் மற்றும் பின்னணி உள்ள நபர்களுக்கு மதிப்பும் மரியாதையும் அளிக்கன்றோம். நாம் சேர்ந்து பணிபுரிதல் மூலமாக, தனியாக அடையும் பலன்களை காட்டிலும் சிறந்த முடிவுகளை உருவாக்க முடியும் என்பதை நாங்கள் அறிவோம்.

**நாங்கள் குழுப்பணியை செயலில் ஈடுபடுத்துவோம்...**

## நாங்கள் மற்றவர்களை மதிப்புடன் நடத்துவோம் மற்றும் அச்சுறுத்தல் மற்றும் துன்புறுத்தல்களை பொறுத்துக்கொள்ள மாட்டோம்

ஒவ்வொரு தனிநபரின் பங்களிப்பின் முழு மதிப்பானது, நாம் மற்றவரை அவர்களிடம் நாம் எதிர்ப்பார்க்கும் மதிப்பு, நேர்மை மற்றும் கண்ணியத்துடன் நடத்துவதன் மூலமாக மட்டுமே உணர முடியும். கேட்டர்பில்லர் அச்சுறுத்தல் மற்றும் துன்புறுத்தல் இல்லாத பணி சூழ்நிலையை வலியுறுத்துகின்றது. தனிநபர் ஊழியராக, ஒரு நேர்மையான பணி சூழலையும், வெளிப்படையாக பேசும் பொறுப்பையும், இந்த கொள்கைக்கு எதிராக நடத்தை ஏதும் கண்டறிந்தால் அதனை மாற்றச்சொல்லி கேட்பதற்கும் உரமை நமக்கு உண்டு.

## நாம் அனைவரையும் நியாமான முறையில் நடத்தி, பாரபட்சத்தை தடை செய்கிறோம்

அனைத்து ஊழியர்களையும் நியாயமான முறையிலும் சமமான முறையிலும் நடத்தி, நாம் ஒரு உற்பத்தி திறன் மிக்க, ஊக்கமுடைய தொழிலாளர்களை உருவாக்கி பராமரிக்க வேண்டும். ஊழியர்கள் மற்றும் பங்குதாரர்களின் பங்களிப்புகளை நாங்கள் மதித்து அடையாளம் கொள்வோம். நாங்கள் ஊழியர்களை, இனம், மதம், தேசம், நிறம், பாலினம், பாலின தன்மை, பாலின நோக்குநிலை, வயது மற்றும்/அல்லது உடல் மற்றும் மன திறன்களை சாராமல் பணிக்கு தேவையான அவர்களின் கல்வித்தகுதி அடிப்படையில் தேர்வு செய்து, நியமிப்போம். அவர்களுக்கு பொருத்தமான சலுகைகளை கருத்தில் கொள்வோம். நாங்கள் வணிகம் புரியும் எந்த இடத்திலும் பாரபட்சத்தை தடை செய்யும் எந்த சட்டங்களுக்கும் கீழ்படிந்து ஆதரவு அளிப்போம்.

# நாங்கள் ஒரு இணக்கமான சூழலை வளர்ப்போம்

நாங்கள் பலவகைமை மற்றும் உட்படுத்துதல் போன்றவற்றிக்கு ஆதரவு அளிக்கின்றோம். நாங்கள் தனிநபர்களின் தனித்துவத்திற்கு மதிப்பு அளித்துஅதனைபாராட்டுவோம். நாங்கள் உயர்தர வணிகம் மற்றும் தனிநபர் பயன்களை எங்கள் மக்கள் அடைவதற்கு உதவும் தனித்தன்மை வாய்ந்த திறமைகள், திறன்கள், தகுதிகள், பண்பாடுகள் மற்றும் அனுபவங்களில் உள்ள வேறுபாடை மதிக்கின்றோம். நாங்கள் பல்வேறு கோணங்களில் கருத்துகளை தேடிப் பெறும்போது அவை, புதிய கண்டுபிடிப்பு தீர்வுகளை வழிநடத்தவும், உயரிய முடிவுகளை வழங்கவும், நாங்கள் சேவை புரியும் மக்கள் மற்றும் சமூகங்களில் நேர்மையான தாக்கத்தை ஏற்படுத்தவும் உதவும் என்பதை நாங்கள் அறிவோம்.

# நாங்கள் உலகளவில் நிலையான உலகதரத்துடன் வணிகத்தை நடத்தி வருகின்றோம்

ஒரு உலகளாவிய நிறுவனமாக, உலகம் முழுவதும் பொருளாதார மற்றும் அரசியல் தத்துவங்கள் மற்றும் அரசாங்கத்தின் வடிவங்கள் போன்றவற்றில் பல வகை வேறுபாடுகள் உள்ளது என்பதை நாங்கள் அறிவோம். நாங்கள் இயங்கிவரும் நாடுகளில் உள்ள சமூக வழக்கங்கள் மற்றும் கலாச்சார மரபுகள் இடையே உள்ள பரந்த வேற்றுமையை ஒப்புக்கொள்கின்றோம். இத்தகைய வேறுபாடுகளை மதிப்பளித்து, கூடுமானவரை நமது நடத்தை விதிகளை பின்பற்றி, நாம் அவர்களிடம் நமது வணிக நடைமுறைகளை ஏற்கும் இசைவுத்தன்மையை பராமரிப்போம். நமது நிறுவனத்தின் சிறந்த பலன்களை அடைவதற்கு நாம் நமது உலகளாவிய அனுபவத்தை பயன்படுப்படுத்துவோம்.

# நாங்கள் எங்கள் நிறுவனத்திற்கு வெளியே உள்ள முக்கிய ஸ்தாபனங்கள் மற்றும் நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுவோம்

நிறுவனத்தின் வலிமை மற்றும் நீடித்து நிலைக்கும்தன்மை, நாம் வணிகம் புரியும் நமது வாடிக்கையாளர்கள், விநியோகஸ்தர்கள், சப்ளையர்கள், முதலீட்டாரர்கள் மற்றும் பலர் உடன் நீடித்திருக்கும் பரஸ்பரம் பயனுள்ள உறவுகளை பேணிக் காக்கும் நமது திறமையின்யின் விளைவாகும். நாங்கள் இந்த பங்குதாரர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அரசு அல்லது அரசு சாரா நிறுவனங்களுடன் அர்த்தமுள்ள உரையாடல்களில் ஈடுபடுவோம். நாங்கள் அவர்களுக்கு செவிம டு த்து, கற்று புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கி, நேர்மையான நம்பகமான நடத்தை மூலமாக தொடர்ந்து பணிபுரிந்து நாங்கள் இந்த உறவுகளை வலுப்படுத்துவோம்.

# நாங்கள் எங்கள் விநியோகஸ்தர்கள் மற்றும் விநயோக சேனல் உறுப்பினர்களுடன் மேலோங்கிய உறவை வளர்ப்போம்

உலகம் முழுவதிலும் உள்ள நமது டீலர்கள் மற்றும் விநியோகஸ்தர்கள் நமது நிறுவனத்திற்கும் நமது வாடிக்கையாளர்களும் இடையே ஒரு முக்கிய இணைப்பாக உள்ளனர். கேட்டர்பில்லரை வெற்றிகரமாக்கிய நீடித்த வாடிக்கையாளர் உறவுகளை பராமரிக்கவும் உருவாக்கவும் அவர்கள் எங்களுடன் பங்கேற்பதற்கு நாங்கள் அவர்களை சார்ந்து உள்ளோம். எங்களின் நற்பெயருக்கு அவர்கள் அளிக்கும் நேர்மையான பங்களிப்புகளையும், அவர்கள் சேவை புரியும் வாடிக்கையாளர்கள் மற்றும் சமூகத்தின் மீது உள்ள அவர்கள் ஆழ்ந்த அர்ப்பணிப்பையும் நாங்கள் மதிக்கின்றோம். அவர்களுடனான எங்களது மேலோங்கிய உறவுகளை நம்பிக்கை, தொடர்பு மற்றும் பகிர்ந்தளிக்கும் சலுகைகள் வழங்குவதன் மூலமாக தக்க வைத்துக்கொண்டிருக்கின்றோம். உலகம் முழுவதிலும் உள்ள வாடிக்கையாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்யத் தேவையான உற்பத்திகள், சேவைகள் மற்றும் ஆதரவை வழங்க அவர்களுடன் தொடர்ந்து பணியாற்றி வருகின்றோம்.

# நாங்கள் எங்கள் சப்ளையர்களை வணிக தோழமைகளாக பார்க்கின்றோம்

முழுமையான விற்பனை சுழற்சி முழுவதும் நெருங்கிய ஒத்துழைப்பின் மூலமாக எங்களது உற்பத்திகள் மற்றும் சேவைகளின் மதிப்பை உயர்த்தும் சப்ளையர்கள் உடன் நாங்கள் ஒரு வலிமையான, பரஸ்பரம் பயனு ள்ள வலிமையான வணிக உறவை வைத்துக்கொள்ள நாடுகின்றோம். நாங்கள் சப்ளையர்களை எங்கள் நிறுவனத்தின் விரிவாக்கமாக பார்க்கின்றோம் மற்றும் விரிவாக்க மதிப்பு சுழற்சி மற்றும் தரத்திற்கான அர்ப்பணிப்பின் இன்றியமையாத பாகமாகவும் பார்க்கின்றோம். கேட்டர்பில்ளர் சப்ளையர் நடத்தை விதிகளில் கொடுக்கப்பட்டுள்ள நெறிமுறை கொள்கைகளுக்கு வலிமையான மதிப்புகளையும் உறுதிகளையும் வழங்கும் சப்ளையர்கள் மற்றும் வணிக தோழமைகளை நாங்கள் வேண்டுகின்றோம். நாங்கள் பின்பற்றும் உயர்ந்த வணிக நடவடிக்கைகளுக்கு இணங்கி, சட்டத்தை பின்பற்றி, மனித உரிமைகளை மதிக்கும் வகையில் செயல்களை நடத்தும் சப்ளையர்களை எதிர்ப்பார்க்கின்றோம். எந்த சப்ளையரும் வணிகத்தில் போட்டியிடுவதற்காகவோ அல்லது சப்ளையராக தொட ர் வதற்காகவோ கேட்டர்பில்லர் உற்பத்திகளை வாங்க வேண்டும் என்பது கிடையாது. கேட்டர்பில்லர் வளாகத்தின் உள்ளே பணிபுரியும்போதும் பணிபுரியும் வேலைக்கு ஏற்ப தகுந்த பொருட்களை கேட்டர்பில்லர் அளிக்கும்போதும் சப்ளையர்கள் கேட்டர்பில்லர் கருவிகளை பயன்படுத்த வேண்டும் என்று சொல்லும் உரிமை, பொருந்தக்கூடிய சட்டங்களுக்கு உட்பட்டு, எங்களுக்கு உண்டு. நாங்கள் எங்களின் சப்ளையர்கள், ஒப்பந்தகாரர்கள் மற்றும் இதர விற்பனையாளர்கள் இடையே நியாமான போட்டிக்கு ஆதரவு அளித்து, அனைவரிடமும் உண்மையுடனும் சமமாகவும் பணிபுரிவோம்.



# அர்ப்பணிப்பு

பொறுப்பின் சக்தி

எங்கள் பொறுப்புகளை நாங்கள் தழுவி நடப்போம். தனிப்பட்ட முறையிலும் ஒட்டுமொத்தமாகவும், நாங்கள் அர்த்தமுள்ள உறுதியளிப்புகளை செய்வோம் - முதலில் எங்கள் ஒருவருக்கொருவர் பின்னர் நாங்கள் பணிபுரியும், வாழும், மற்றும் சேவை புரியும் நபர்களுடன். நாங்கள் எங்கள் வாடிக்கையாளர்களின் தேவைகள் மீது கவனம் செலுத்தி அதனை புரிந்துகொள்வோம். நாங்கள் நமது சூழலின் மேல் பாதுகாப்பும் அக்கறையும் செலுத்துவதுடன், நமது வணிகத்தை அறவழியில் நிர்வகிக்கும், நமது சமூகத்தின் பொறுப்புள்ள உறுப்பினர்கள் ஆவோம். இது எங்கள் கடமை என்பதையும் கேட்டர்பில்லர் பாரம்பரியத்தை முன்னோக்கி எடுத்துச் செல்வது எங்கள் பெருமை என்பதையும் நாங்கள் அறிவோம்.

**ன்போது நாங்கள் அர்ப்பணிப்பை செயலில் ஈடுபடுத்துவோம்...**

# நாங்கள் தனிப்பட்ட பொறுப்புகளை எடுத்துக்கொள்வோம்

நாம் அனைவரும் கேட்டர்பில்லரின் வெற்றிக்கு உறுதியளிக்கவேண்டும் மற்றும் நாம் ஒவ்வொருவருக்கும் கேட்டர்பில்லரின் நற்பெயரை பாதுகாத்து போற்றும் பொறுப்பு உள்ளது. அனைத்து ஊழியர்களுக்கும் தனிப்பட்ட மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட இலக்குகளை பூர்த்தி செய்யும் தனிப்பட்ட பொறுப்பு உள்ளது. நாங்கள் ஊழியர்களிடம் இருந்து, சிறந்த நடத்தையையும், நமது நற்பெயரை சேதப்படுத்தும், கேவலப்படுத்தும் அல்லது அவமானப்படுத்தும் எந்த தொடர்புகளையும், வெளியீடுகளையும் சந்திப்புகளையும் தவிர்ப்பதையுமே எதிர்ப்பார்க்கின்றோம். வணிக நடைமுறைகளுக்கு ஒப்புதல் அளித்து, நிறுவன கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை பின்பற்றி, சட்டத்திற்கு இணங்கி நடப்பதற்கு ஊழியர்கள் தனிப்பட்ட முறையில் பொறுப்பாவார்கள்.

# நமது சொத்துக்கள், பிராண்ட்ஸ் மற்றும் அறிவுசார் சொத்துடைமைகளை நாங்கள் பாதுகாப்போம்

நாங்கள் நமது சொத்துக்கள் அனைத்தையும் சேமிக்கவும், பாதுகாக்கவும் மற்றும் பொறுப்புடன் பயன்படுத்தவும் அசாதாரண அளவுகள் வரை செல்லுவோம். இதில் உணரத்தக்க மற்றும் உணர முடியாத உடைமைகளான எங்களது பிராண்ட்ஸ், தொழில்நுட்பம், வணிக தகவல்கள் மற்றும் அறிவுசார் முதலீடுகள் அடங்கும். நாங்கள் எந்தவித வர்த்தக ரகசியங்கள் அல்லது நிறுவனம், எங்கள் வாடிக்கையாளர்கள், டீலர்கள் மற்றும் சப்ளையர்கள் தொடர்பான இதர முக்கியமான விவரங்களை - எங்கள் நிறுவனத்தில் பணிபுரியும்போதும் அதற்குப் பிறகும்கூட- வெளியிடமாட்டோம். நிறுவன தகவல்களை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளும்போது, நமது விருப்பங்களை பாதுகாக்க தேவையான கட்டுப்பாடுகள் இருப்பதை உறுதி செய்ய நாம் பாடுபடுவோம். நாங்கள் மற்றவர்களின் உண்மையான அறிவுசார் சொத்துடைமை உரிமைகளுக்கு மதிப்பளிப்போம். நாங்கள் அதிக பொதுஅறிவும் பல்வேறு தொழில்நுட்ப இடங்களில் அனுபவம் உள்ளவர்களையே தேர்வு செய்வோம், வர்த்தக இரகசியங்கள் மற்றும் முக்கிய தகவல்கள் கிடைக்கும் என்பதற்காக யாரையும் தேர்வு செய்யமாட்டோம். நமது நிறுவனத்தின் சொத்துக்களை இழப்பு, திருட்டு, சேதம் அல்லது தவறாக பயன்படுத்தலில் இருந்து பாதுகாப்பதில் நம் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட பொறுப்பு உள்ளது.

# எங்கள் இரகசிய தகவல்களை நாங்கள் பாதுகாக்கின்றோம்

நாங்கள் கொண்டுள்ள இந்த தகவல்களை ஒரு உடைமையாக கருதி, அதனை பாதுக்காகின்றோம். சில தகவல்கள, -விளம்பரம், ப்ராடக்ட் ஆவணம், செய்தி வெளியீடுகள் மற்றும் பொதுப்படையான நிதி அறிக்கைகள் போன்றவற்றை நாங்கள் பொதுவாக தெரிவிப்போம். மற்றவை அனைத்தையும் - வர்த்தக இரகசியங்கள், ரகசிய நிதி தகவல்கள், புதிய ப்ராடக்ட் அல்லது சேவை தயாரிப்பு திட்டங்கள் மற்றும் இதர நிறுவன மற்றும் தனிப்பட்ட தகவல்கள் உள்ளிட்டவை - நாங்கள் சரியான மற்றும் முறையான பாதுகாப்புடன் பாதுகாத்து, தேவைப்பட்டால், சட்டரீதியான அமல்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள் மூலமாகவும் பாதுகாப்போம்.

# நாங்கள் மின்னணு தொடர்புகள் தொழில்நுட்பத்தை பொறுப்பாகவும் தொழில்முறையாகவும் பயன்படுத்துவோம்

மின்னணு தொடர்பு தொழில்நுட்பமானது, நாம் அன்றாடம் எவ்வாறு வணிகத்தை நடத்தி வருகின்றோம் என்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. நிறுவனத்தின் தொழில்நுட்பமானது, முறையான வணிக நடவடிக்கைகளுக்காக, அனுமதிக்கப்பட்ட நபர்கள் மூலமாக பராமரிக்கப்பட்டு, நேர்மையான, தொழில்முறையான வணிக சூழலுக்கு ஆதரவாக உள்ளது. நிறுவன தொழில்நுட்பங்களான இணையதளம் மற்றும் கேட்டர்பில்லர் சிஸ்டத்தின் பயன்பாடு மற்றும் அணுகல்கள், பொறுப்புடனும் தொழில்சார்ந்த முறையிலும் விதிகளுக்கு உட்பட்டு இதர நிறுவன கொள்கைகளுக்கு இணங்கி பராமரிக்கப்படவேண்டும் என்று எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

# நாங்கள் தனிநபர் தனியுரிமைக்கு மதிப்பளித்து அடையாளம் கொள்கின்றோம்

நாங்கள் தனிநபர்களின் தனிநபர் தகவல்கள், தனியுரிமை விருப்பங்களை மதித்து அடையாளம் கொள்கின்றோம். நாங்கள் வணிகத்திற்கு தேவையான அல்லது சரியான தனிப்பட்ட தகவல்களை மட்டுமே சேகரித்து செயல்படுத்துவோம்.இதனையும் சட்டரீதியாகவும் நியாயமானதாகவும் மேற்கொள்வோம். நாங்கள் தனிப்பட்ட தகவல்கள் உள்ள நிறுவனப் பதிவுகளை, அவை கேட்டர்பில்லர் அல்லது கேட்டர்பில்லர் வணிக பங்குதாரர் யார் வைத்திருந்தாலும், அவற்றின் பாதுகாப்பிற்கும் இரகசியதன்மைக்கும் தேவையான சரியான நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

# நாங்கள் பொதுவிஷயங்களில் சரியான முறையில் பங்கு பெறுவோம்

உலகளவில் உள்ள பொது கொள்கை விஷயங்களில் ஈடுபடுதல் கேட்டர்பில்லரின் வெற்றிக்கு மிகவும் முக்கியமானது என்று நாங்கள் நம்புகின்றோம். இயக்குனர்கள் குழுவின் மேற்பார்வையுடன், நிறுவனம் பொது கொள்கை விஷயங்களில் ஈடுபட்டு, சட்டம் அனுமதிக்கும் அரசியல் பங்களிப்புகளை, அரசு அதிகாரிகளின் அனுமதியுடன் மேற்கொள்ளும். நமது ஊழியர்கள், அவர்களின் தனிப்பட்ட நம்பிக்கைகளுக்கு ஏற்றவாறு, பொது விஷயங்கள் மற்றும் அரசியல் முறைகளில் பங்கேற்க சுதந்திரமாக உணர வேண்டும். ஊழியர்கள் பொதுவிஷயங்கள் மற்றும் அரசியல் முறைகளில் தனிப்பட்ட முறையில் ஈடுபடும்போது, இத்தகைய நடவடிக்கைகள் ஒரு தனிப்பட்ட குடிமகனாக நிறுவன சொத்துக்களை பயன்படுத்தாமல் செயல்படுத்தப்பட வேண்டும்.

# பொதுத்துறையுடன் வணிகம் புரியத்தேவையான தனித்துவம் வாய்ந்த விதிகளை நாங்கள் மதிக்கின்றோம்

அரசு மற்றும் மாநிலம் நடத்தும் நிறுவனங்கள் உடனான ஒப்பந்தங்களுக்கு சிறப்பு விதிகள் பொருந்தும் என்பதை நாங்கள் புரிந்து வைத்துள்ளோம். இந்த வாடிக்கையாளர்களுக்கு எங்களின் ஒப்பந்த உறுதியளிப்புகளுக்கு மதிப்பளித்து, பொது சந்தையில் பரிவர்த்தனைக்கான பொருந்தக்கூடிய அனைத்து சட்டங்களையும் பின்பற்றுவோம். இந்த வகை வணிகத்தால் சுமத்தப்படும் கடமைகளை பூர்த்தி செய்ய வேண்டிய பொறுப்பு எங்களுக்கு உள்ளது.மேலும், நாங்கள் நேர்மையுடனும் நாணயத்துடனும் செயல்படுவதை உறுதி செய்வோம்.



# சுற்றுப்புற சூழலை பேணிக்காத்தல்

நீடித்திருக்கும் திறன்

**நாங்கள் ஒரு சிறந்த உலகை உருவாக்க உறுதி பூண்டுள்ளவர்கள்.** பேண்தகைமை என்பது நாங்கள் யார் என்பதும் ஒவ்வொரு நாளும் நாங்கள் என்ன செய்கின்றோம் என்பதின் பகுதியாகும். முன்னேற்றம் என்பது சூழலை காப்பது, சமூக பொறுப்புகள் மற்றும் பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றை சமநிலையோடு கையாள்வது தொடர்பானது என்பதை நாங்கள் அடையாளம் கொண்டுள்ளோம். தங்குமிடம், சுத்தமான தண்ணீர், கல்வி மற்றும் நம்பத்தக்க சக்தி போன்ற மக்களின் அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யப்பட்ட ஒரு உலகை நோக்கிய எங்களின் பணி எனக் இதனை கருதுகிறோம். வளங்களை ஆக்கப்பூர்வமான முறையில் திறம்பட பயன்படுத்த தக்க பணி சூழல், ப்ராடக்ட்ஸ், சேவைகள் மற்றும் தீர்வுகளை நாங்கள் வழங்குகின்றோம் இதன் மூலம் எங்கள் இலக்கை அடைய பாடுபடுகின்றோம். இந்த அர்ப்பணிப்பு எங்களின் வாடிக்கையாளர்கள், பங்குதாரர்கள், டீலர்கள் மற்றும் எங்கள் மக்களின் வெற்றிக்கு நீடித்த ஆதரவு அளிக்கிறது என்று நம்புகின்றோம்.

**நாங்கள் சுற்று புற சூழலை பேணி காக்கும் செயலில் ஈடுபடுவோம்...**

## நாங்கள் எங்களது மற்றும் மற்றவரது பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்தை பாதுக்காப்போம்

நாங்கள் எங்கள் மக்களுக்கு மதிப்பளித்து, பாதுகாப்பான, ஆரோக்கியமான மற்றும் உற்பத்தி மிகுந்த வாழ்வை மக்கள் வாழும் உலக சூழலை நோக்கி பங்களிக்கின்றோம். அனைத்துக் காயங்கள், பணி நிமித்த உடற்கோளாறுகள் மற்றும் பாதுகாப்பு நிகழ்வுகள் போன்ற அனைத்தையும் தடுக்க வேண்டும் என்ற பேரார்வம் கொண்ட இலக்குடன் பாதுகாப்பை நாங்கள் முதலில் வைக்கின்றோம். அவர்களையும் அவர்களின் சக பணியாளர்களின் பாதுகாப்பிற்கு உதவி புரியும் கொள்கைகள் மற்றும் பயிற்சி திட்டங்கள் மூலம் எங்கள் சொத்துடைமையைவிட அனைவரின் ஆரோக்கிய மற்றும் பாதுகாப்பை நாங்கள் முனைப்புடன் ஊக்குவிக்கின்றோம். பாதுகாப்பு நடைமுறைகள் மீதான எங்களது அர்ப்பணிப்பானது, எங்கள் தொடர் மதிப்பு - சப்ளையர்கள் முதல் பயனாளிகள் வரை நீடிக்கும். நாங்கள் எங்கள் வாடிக்கையளர்களுக்கு பாதுகாப்பான மற்றும் நம்பகமான ப்ராடக்ட்ஸ் மற்றும் சேவைகளை வழங்குவதில் உறுதி கொண்டுள்ளோம்.

## நாங்கள் எங்கள் வாடிக்கையாளர்களை மிகவும் திறனாளியாகவும் உற்பத்தி மிகுந்தவராகவும் ஆக்க புதிய கண்டுபிடிப்புகளை செய்து வருவோம்

நாங்கள் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் இயக்கங்களின் சுற்றுப்புற சூழல் பேணிக்காத்தலைமேம்படுத்தும் உற்பத்திகள், சேவைகள் மற்றும் தீர்வுகளை வழங்குவதற்காக புதிய கண்டுபிடிப்புகளை செய்கிறோம். நாங்கள் தொழில்நுட்பம் மற்றும் வாடிக்கையாளர் பற்றிய அறிவைப் பயன்படுத்தி ப்ராடக்ட் செயல்திறனை மேம்படுத்தி, மறு உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் ப்ராடக்ட்-டின் வாழ்வை நீட்டித்து, பணியிடங்களை அதிக பயனுள்ளதாகவும், பாதுகாப்பாகவும் அதிக திறனுள்ளதாகவும் செய்கிறோம். நாங்கள் எங்கள் டீலர்களும் இதனையே செய்யுமாறு ஊக்குவிக்கிறோம். கேட்டர்பில்லர் மற்றும் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு லாபகரமான வளர்ச்சியை விளைவிக்கச்செய்யும் அதே நேரம் நமது சுற்றுசூழலை பாதுகாக்கும் காப்பாற்றும் பேண்தகைமை தீர்வுகளுக்கு நாங்கள் ஆதரவு அளிக்கிறோம். எங்கள் ப்ராடக்ட்ஸ் மற்றும் சேவைகள் அவை தொடக்கத்தில் எங்கு விற்கப்பட்டதோ அங்குள்ள பொருந்தகூடிய விதிமுறைகளை பூர்த்தி செய்வதாகவோ அல்லது அதற்கும் அதிகமாகவோ இருக்கும்.

# நாங்கள் சுற்றுசூழல் பொறுப்புகள் மற்றும் கழிவுகளை தடுப்பதில் கவனம் கொள்கின்றோம்

நாங்கள் எங்கள் இயக்கங்களில் தரம் மற்றும் திறனை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தி எங்களின் சுற்றுசூழல் தாக்கத்தை குறைக்கின்றோம். நாங்கள் கழிவு தடுப்பு செயல்படுத்தும், தரத்தை மேம்படுத்தும் மற்றும் எங்கள் இடங்களில் உள்ள வளங்களை திறம்பட பயன்படுத்துவதை அதிகரிக்கும் வணிக நடவடிக்கைகள் பயன்படுத்துவதன் மூலம் சுற்றுச் சூழல் காப்பாளர் தன்மையை ஆதரிக்கின்றோம். எங்களின் கழிவு தடுப்பு முயற்சிகள் சப்ளையர்கள் முதல் எங்களது டீலர்கள் வரை மதிப்பு சுழற்சி முழுவதிலும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. நாங்கள் அவர்களுடன் இணைந்தது எங்கள் ப்ராடக்ட்களின் உற்பத்தி மற்றும் டெலிவரி முழுவதிலும் பயன்படுத்தப்படும் முறைகள் மற்றும் சிஸ்டம்களை மேம்படுத்த பணிபுரிவோம். நாங்கள் சுற்றுசூழல் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்குவதை உறுதி செய்கின்றோம் மற்றும் எங்கள் சப்ளையர்கள் மற்றும் டீலர்களும் இதனையே செய்வதை எதிர்ப்பார்க்கின்றோம்.

# நாங்கள் உள்கட்டமைப்பு வளர்ச்சி மற்றும் எரிசக்தியின் அணுகல்களுக்கு ஆதரவு அளிக்கின்றோம்

அதிகரித்துவரும் உலக மக்கட்தொகை தேவைகளை பூர்த்தி செய்யவும், உலகம் முழுவதிலும் வாழ்வு தரத்தை மேம்படுத்தவும், உள்கட்டமைப்பு வளர்ச்சிமற்றும் பாதுகாப்பான நம்பத்தக்க எரிசக்தி வளங்கள் அணுகல்கள் ஆகியவை தேவைப்படும். பாரம்பரிய எரிசக்தி வளங்கள் மற்றும் மாற்று புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தொழில்நுட்பங்கள் உள்ளிட்ட அனைத்து எரிசக்தி வளங்களின் பயன்பாடு மற்றும் தொடர் கட்டமைப்பு வளர்ச்சியை ஊக்குவிக்கும் சமமான மற்றும் விரிவான கொள்கைகளை நாங்கள் ஆதரிக்கின்றோம். நாங்கள் பேண்தகைமைமிக்க எரிசக்தி உற்பத்தி மற்றும் கட்டமைப்பு வளர்ச்சி தீர்வுகளுக்கு பங்களிக்கும் ப்ராடக்ட்ஸ் மற்றும் சேவைகளை உருவாக்குவோம்.

## நாங்கள் நமது சமூகங்களின் உயிர்ப்பான உறுப்பினர்கள்

தனிநபர்களாகவும் நிறுவனமாகவும், உலகம் முழுவதிலும் உள்ள சமூகங்களின் ஆரோக்கியம், நலம் மற்றும் பொருளாதார நிலைத்தலை அதிகரிக்க நாங்கள் எங்கள் நேரம் மற்றும் வளங்களை பங்களிப்போம். நாங்கள் மனித உரிமைகளை மதிக்கத்தக்க முறையில் எங்கள் வணிகத்தை நடத்தி வருகின்றோம். எங்கள் சமூகங்களை வலுவடையச் செய்யும் செயல்களில் பங்கேற்க நாங்கள் அனைத்து ஊழியர்களையும் ஊக்குவிக்கின்றோம். நமது வெற்றியானது நாம் பணிபுரியும், வாழும் மற்றும் சேவைபுரியும் சமூகங்களின் பேணிக்காத்தல், செழுமை மற்றும் வாழ்வு தரத்திற்கான பங்களிப்பாகவும் இருக்க வேண்டும்.

## நாங்கள் சிறந்த மக்களை கவர்ந்து, சிறப்பான குழுவை உருவாக்குவோம்

நாங்கள் கேட்டர்ப்பில்லரின் நீடித்த வெற்றிக்கு எங்களின் மக்களின் முக்கியத்துவத்தை புரிந்துகொண்டுள்ளோம். நாங்கள் புதிய கண்டுபிடிப்பு, அதிக செயல்திறன் கொண்ட ஊழியர் களைகவர்ந்து சிறந்த குழுவை உருவாக்கி, எங்களின் தேவைக்கு ஏற்ப உலக தொழிலாளர் களை செயல்பட திட்டமிடுவோம். நாங்கள் எங்கள் நம்பிக்கை மற்றும் ஈடுபாட்டை வெளிப்படையான நேர்மையான உரையாடல்கள் மூலமாக உருவாக்கி, ஊழியர்களை அவர்களின் பணி விருப்பங்கள் மற்றும் தனிநபர் வளர்ச்சியை அடைவதற்கு ஊக்குவிப்போம். ஒரு நீடித்த நிலையான தொழிலாளர் குழு என்பது அதன் அர்ப்பணிப்புகளை இப்பொழுதும் எதிர்காலத்திலும் வழங்குவதற்கு எப்பொழுதுமே தயாராக இருக்கும் ஒன்றாகும்.

## நிறுவன கொள்கைகள் மற்றும் கூடுதல் விவரங்கள்

நிறுவன கொள்கைகள் மற்றும் இதர கூடுதல் விரிவான நிறுவன கொள்கைகள் மற்றும் இந்த நடத்தை விதிகள் மீதான வழிநடத்தல் மற்றும் கூடுதல் தகவல்கள், ஊழியர்கள் படிப்பதற்காக **https://codeofconduct.cat.com** யில் உள்ளது, அல்லது முன்னர் பட்டியலிடப்பட்ட முறைகளில் ஏதேனும் ஒன்றை பயன்படுத்தி வணிக நடைமுறைகள் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம். பொதுமக்களுக்காக இந்த நடத்தை விதிகள் **http://www.caterpillar.com/Code-of-Conduct** யில் உள்ளது. இந்த நடத்தை விதிகள் வெளியிடும்போது நிறுவன கொள்கைகளில் இவை செயலில் வரும்:

- நம்பிக்கையின்மை
- பர்டிசான் அரசியல் மற்றும் பொதுமக்கள் கொள்கைகள் மீதான நிறுவனத்தின் மனப்பான்மை
- விருப்ப முரண்பாடுகள்
- தகவல் தனியுரிமை
- நிறுவன வசதிகள்
- இலவச வர்த்தகம்
- முறையற்ற செலுத்தினங்கள்
- அறிவுசார் சொத்துடைமை உரிமைகள்
- உடைமைகள் பாதுகாப்பு
- போக்குவரத்து, பரிசுகள் மற்றும் பொழுதுபோக்கு வழங்குதல் மற்றும் பெறுதல்
- பொதுப்படையான தொடர்புகள்

## தள்ளுபடி

நமது நிறுவனத்தில், மற்றவர்களை வழிநடத்துபவர்கள் "விதிகளின்படி வாழுதல்" என்பதின் அர்த்தத்திற்கு எடுத்தக்காட்டாக இருக்க வேண்டிய ஒரு சிறப்பான பொறுப்பை வகிக்கிறார்கள். இதன் விளைவாக, ஏதேனும் செயல் அலுவலர் அல்லது இயக்குனர் இந்த நடத்தை விதிகளில் இருந்து சலுகை பெற வேண்டினால், அதனை இயக்குனர்கள் குழு மட்டுமே அனுமதித்து, சட்ட மற்றும் கட்டுப்பாடிற்கு தேவையான வெளிப்பாடுகளை தெரிவிக்க வேண்டும். வேறு இதர ஊழியர்களுக்கான நடத்தை விதிகளில் இருந்து விதிவிலக்கம் தேவைப்பட்டால், முதன்மை நெறிமுறை மற்றும் இணக்க அதிகாரி மற்றும் வணிக நடைமுறைகள் அலுவலகம் மட்டுமே செய்ய முடியும்.

CATERPILLAR®

© 2023 கேட்டர்பில்லர் அனைத்து உரிமைகள் பதிவு செய்யப்பட்டது USA வில் அச்சிடப்பட்டது.

CAT, கேட்டர்பில்லர், அவர்களின் லோகோஸ் மற்றும் இங்கிருந்து பயன்படுத்தப்படும் நிறுவன அடையாளங்கள், கேட்டர்ப்பில்லரின் அடையாள முத்திரைகள் ஆகும் மற்றும் அனுமதியின்றி அவை பயன்படுத்தப்படக்கூடாது.

YECX0001-07

Mixed Sources
Product group from well-managed forests, controlled sources and recycled wood or fiber
www.fsc.org Cert no. SW-COC-XXXXXX
© 1996 Forest Stewardship Council
FSC